7. அறிவிப்பு

இளையான்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன் பதவி விலகல் ஏற்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன், இளையான்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் 25-2-2009 ஆம் நாள் முதல் தனது சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்வதாகக் கடிதம் அளித்துள்ளார். அவரது ராஜினாமா கடிதம், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 21(1)-ன்படி முறையாக அமையப்பெற்றுள்ளதால், அவரது சட்டமன்ற உறுப்பினர் பதவி விலகலை 25-2-2009 ஆம் நாள் முதல் ஏற்றுக்கொண்டுள்ளேன் என்பதைப் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (26-2-2009) வியாழக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

57. 2007-2008 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் இருபத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

32. 2007-2008 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

33. மனுக்கள் குழுவின் அறுபத்தொன்பதாவது அறிக்கை. (2008-2009)